69

உ

சிவமயம்.

பல அவதார ஸ்ரீமந் நாராயண ஸ்தோத்திரம்.

இவை

சிதம்பரம் தாலுக்கா வையூர் கிராமம் சேரியிலிருக்கும்

நாகசுரம் வீரன் குமாரன்

முத்துக்குமரனால்

இயற்றியதை

சிதம்பரம் ஸ்ரீபார்வதி விலாஸ

அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

1924

அணா 1.

9 - JAN 1924

Q22:41
N24
L81044

உ

சிவமயம்

விருத்தம்.

அய்யனே போற்றி போற்றி
அருமறை கமலா போற்றி
துய்பனே போற்றி போற்றி
துலங்கும் மெஞ்ஞான போற்றி
அண்டர்மா முனிவர்க்கெல்லாம்
அமுதளித்தவனே போற்றி
அண்டர்கள் துயரம் தீர்த்த
உன் திருவடி போற்றி போற்றி

பல அவதார ஸ்ரீமந் நாராயண ஸ்தோத்திரம்.

சோமசேகரனருளும் என்ற வர்ணமெட்டு

1 ராம ராம ராம ராம ராமனுஜம்
ராம ராம ராம ராம ராமச்சந்திரா
சோமா சோமா சோமா சோமா சோமசுந்திரா
நாமா நாமா நாமா நாமா நாராயணா

2 நந்தகோபால கமலா நாராயணா உன்
பாதமேயான் தொழுதேன் ஹரிகோவிந்தா
துஷ்டர்களை அடக்கவந்த கலியுகந்தா ராமா
ஏழைகளைக் காக்க வந்த ஸ்திரீ மந்தா

3 சோமுகாசூரன் திருடிபோன வேதந்தன்னை ஸ்திரீ
மீனுருவாகியதோர் ராமா ராமா சோமா
பூமியைக்கொண்டுபோன இரணியாக்கனை நாமா
வராகமாய்நின்றுக்கார்த்த ராமச் சந்திரா

1810ழ்

4 ஆதியில் மந்திரக்கிரியை கமலா கமலா
தேவர்க்குமுப் பிணியைநீக்க நிமலா நிமலா
அமுதளித்த ஸ்திரிமந்த நமா நாமா
காண்டியால் ராகூவடித்த சோமா சோமா

5 வாமனராய் தோன்றி வந்தாய் மாபலிக்கு அவன்
தோஷங்களை மூன்றடியாய் பிரவசம் கொண்டீர்-ராமா
தேசமெங்கும் புகழோங்க பரசுராமனாய்-கோமா
பிறசங்கமாய் வில்பிடித்து வெற்றிகொண்டீர்

6 ராவணனும் கெற்வமதால் சீதாப்பியால்-ராமர்
பாணமதால் குலம்முழுதும் நாசமானான்-கோவே
ரத்தினகிரியை நந்தா குடையாய் வைத்தாய்-ஹரி
நித்தியாறு கூலனென்றும் பெயரெடுத்தாய்

7 ஆதிமூல மென்றலரிய யானைக்குதான்-ராமா
அபேஸ்தம் கொடுத்து கார்த்த நீலமேகா-காட்டில்
மறவேடனுக்கு முத்திதந்தாய்-சுந்திரா
மண்டலம் புகழும் மாயா நேயா ஐயா

8 இரணியனும் உன்பெயரை இழிவாய்ச்சொன்னான்-அவனை
ஒழிக்கவேண்டி பிரகலாதனாய் பிறந்தாய்-பின்
தூணில் நின்று இருபிளப்பாய் உக்கிரம் கொண்டு-அவனை
கிழித்து நின்ற ஹரி நமோ நாராயணா

9 தானாக்கெர்வம் கொண்ட பத்மா சூரனை-ராமா
மோகினிப்பெண் ரூபத்தினாலெரிய வைத்தாய்-அப்போ
ஈஸ்வரன் விந்தினால் காத்தைமுடி-ராமா
ஐயனாரயிருப்பீரென்றும் வாழும் தந்தீர்

10 காளிங்கனென்னும் சர்ப்பத்தின்மேல் நிர்த்தம் செய்தாய்
அவன்ராக்ஷதனென்றறிந்ததினால் கெர்வம் தீர்த்தாய்-நீர்
துஷ்டர்களை அடக்க வந்தாய் ராமனாக-சோமா
பக்தர்களை காக்கவந்தாய்-மாயனாக

11 தேவகி மைந்தனென்றும் பெயரெடுத்தாய்-பூமா
கம்ஸனென்னும் உன் அம்மானைக் கொன்றுதீர்த்தாய்-உன்
சொல்படிக்கு வந்தானானால் காப்பீரையா-கிருஷ்ணா
சொல்படிக்கு வாராமையால் கொன்று தீர்த்தாய்

12 கல்லான அகலிகையைபெண்ணய்வைத்தாய்-உன்
பாதத்தூள் பட்டடனே சாபம் தீர்த்தாள்-அச்சுதா
பச்சமுகில் மேனியானே நித்தியகூலா-நேயா
பக்தர்களைக் காக்கவந்த விஷ்ணுவையா

13 தோத்திரமாகப்பாடினேன் வாசன் வாசன்
நித்தம் உன்னடிப் பணியும் நேசன் நேசன்-புகழ்
பாடிடும் பெரியோர்கட்கு சிஷன் சிஷன்—சிறு
பாலகன் முத்துக்குமரன் தாசன் தாசன்

கும்மி

1 கும்மியடி பெண்கள் கும்மியடி
இருகரம கூப்பியே கும்மியடி
நம்மையாளும் நாராயணன் பாதத்தை
நாடிக்கும்மி யடியுங்கடி

2 சில்லரை தெய்வத்தை வேண்டாதீர்கள்
நமக்கு முத்தி கிட்டாது
பக்தர்கட்குபின் தொடர்ந்துபோன
பங்கயப்பாதனை நாடுங்கடி

3 தினம் துதித்துக் கொண்டாடுங்கள்
நமக்கு பரகதி உண்டாகும்
கருடவாகனேமேரு மெய்யனை
சோமச்சுந்திரனை நாடுங்கடி

4 எப்போதும் பஜனை பண்ணுங்கள்
ஹரிநாமத்தை எப்போதும் நாடுங்கள்
நம்மை ரக்ஷிக்கும் கோபாலகிருஷ்ணனை
நாடிக் கும்மியடியுங்கடி

5 திருவரங்கத்தை நாடுங்கள் தினம்
துதித்துக்கொண்டாடுங்கள்
நம்மையாளும் கபடச் சூஸ்திரனை
நாடிக் கும்மியடியுங்கடி

6 அஷ்டாக்ஷரத்தை நேமியுங்கள் நாம்
வேறுப்பிறவி பிறக்கமாட்டோம்
தில்லையிலமர்ந்த கோவிந்தராயனை
நாடிக்கும்மியடியுங்கடி

181044

7 ஒருதெய்வமென்றே பிடித்தாக்கால்
உடனேமோக்ஷங்கள் நாம்பெறலாம்
நம்மைரக்ஷிக்கும் ஆபத்தபந்தனை
நாடிக்கும்மியடியுங்கடி

8 பூவுலகிலுள்ள தீயர்களைக்கண்டு
உபாயமாகவே தானடக்கப்போதும்
துஷ்டருக்கு துஷ்டனாகநின்றபல
ரூபநாதனை நாடுங்கடி

9 உண்மை உண்மை என்று பாடினேன்
மேதினியுள்ளப் பெரியோரே
கண்டுப்பிடித்துக்கொள்ளுங்கள் ஹரி
நாராயணன் பாதத்தைச்சேருங்கள்

10 மறைபோல்ச் சொன்னேன் தாசன்
முத்துக்குமரன் பாடினேன் ஹரி நாரா
யணன்மேல் நம்மை ரக்ஷிக்கும்
இருப்புயத்தோளனை நாடிக் கும்மியடியுங்கடி

நொண்டிச்சிந்து

எத்தனையோபக்தர் ஸ்ரீநாராயணனாலவர், மோக்ஷ
மடைந்தோர், எத்தனைபோதுஷ்டர் அவரை நம்பி
க்கையில்லாமல் மாண்டுபோனார், நாம் எப்போதும்
துதித்தோமானால், கன்றுக்கு பால்பசு தொடரும்போலே
அவர் நம்மை தொடருவாரே, நாம் நாராயணன் பாதத்
தை உண்மையாய்ப்பிடி;இராமா உன்பாதம் பிடித்தேன்
அடியேனைக்காரும் மெய்ஞானச்சொரூபனே ஹரி
ராமாஎன்றுதித்தேன், ஏழையைக்கைவிடாதீர்
எம்பெருமானே, வையூர் பக்தன் முத்துக்குமரன், பாடி
னேன் உன்பாதம், சிரசிமேல்க்கொண்டேன்

தந்தின தந்தனனம்.

181044